

# அருங்கலச்செப்பு; அறநெறிச்சாரம்

# அருங்கலச் செப்பு
# அறநெறிச்சாரம்

பதிப்பாசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
**எஸ். ராஜம்**
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1
1959

# அருங்கலச் செப்பு

### அருகன் துதி

அணி பதிக்குடை அருகனைத் தொழ,
அருவினைப் பயன் அகலுமே.

### அறம் மூன்று

மூன்று உணர்ந்தானை ஏத்தி, மொழிகுவன்—
குற்றம் ஒன்று இல்லா அறம். 1

நற்காட்சி, நன்ஞானம், நல்-ஒழுக்கம்,—இம் மூன்றும்
தொக்க அறச்சொல் பொருள். 2

### நற்காட்சி

'மெய்ப்பொருள் தேறுதல் நற்காட்சி' என்று உரைப்பர்—
எப்பொருளும் கண்டுணர்ந்தார். 3

### நிலையான பொருள்கள்

தலைமகனும், நூலும், முனியும்,—இம் மூன்று
நிலைமையவாகும் பொருள். 4

### தலைமகன்

குற்றம் ஒன்று இன்றி, குறை இன்று உணர்ந்து, அறம்
பற்ற உரைத்தான்—இறை. 5

பசி, வேர்ப்பு, நீர்வேட்கை, பற்று, ஆர்வம், செற்றம்,
கசிவோடு இல்லான்—இறை. 6

கடை இல் அறிவு, இன்பம், வீரியம், காட்சி,
உடையான்—உலகுக்கு இறை. 7

தெரித்த பறையின் இராகாதி இன்றி
உரைத்தான்—இறைவன்—அறம். 8

நூல்

என்றும் உண்டாகி, இறைவனால் வெளிப்பட்டு,
நின்றது நூல் என்று உணர். 9

மெய்ப்பொருள் காட்டி, கசிர்கட்டு அரண் ஆகி,
துக்கம் கெடுப்பது—நூல். 10

முனி

இந்திரியத்தை வென்றான், தொடர்ப்பாட்டோடு ஆரம்பம்
முந்து துறந்தான்—முனி. 11

தத்துவ ஞான நிகழ்ச்சியும், சிந்தையும்
உய்த்தல்—இருடிகள் மாண்பு. 12

நற்காட்சியின் எண் வகை உறுப்பு

எட்டு வகை உறுப்பிற்று ஆகி இயன்றது—
கட்டிய நற்காட்சிதான். 13

ஐயம், அவாவே, உவர்ப்பு, மயக்கு, இன்மை
மெய்பெற இன்னவை நான்கு. 14

அறப்பழி நீக்கல், அழிந்தாரைத் தாங்கல்,
அறத்துக்கு அளவளா, மூன்று. 15

அறத்தை விளக்கலோடு, எட்டு ஆகும் என்ப—
திறப்பட உள்ள உறுப்பு. 16

ஐயம் இன்மை

மெய்த்தெரிக்கண் உள்ளம் துளக்கு இன்மை—காட்சிக்கண்
ஐயம் இலாத உறுப்பு. 17

அவா இன்மை

தடுமாற்ற இன்பக்கு இவறுமையாகும்—
வடு மாற்று அவா இன்மை நற்கு. 18

உவர்ப்பு இன்மை

பழிப்பு இல் அருங்கலம் பெய்த உடம்பு என்று
இழிப்பு இன்மை—மூன்றும் உறுப்பு. 19

மயக்கு இன்மை

பாவ நெறியாரைச் சேர்ந்த மதிப்பு இன்மை—
மோகம் இலாத உறுப்பு. 20